# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 4, 2026

Weekly E-paper ● April 4, 2026








## தமிழ்நாடு பாஜகவில் குழப்பமா?

எழில்.இளங்கோவன்

## படங்கள் பேசுகின்றன

## ஊசிப் பட்டாசு

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஏப்ரல் 4, 2026 Weekly E-paper ●April 4, 2026


## தமிழ்நாடு பாஜகவில் குழப்பமா?



**எழில்.இளங்கோவன்**

ஏப்ரல் 4ஆம் தேதி பிரதமர் மோடி சென்னை வரப்போகிறார், ரோட் ஷோ நடத்தப் போகிறார், அனைத்து பாஜக வேட்பாளர்களையும் அழைத்துப் பேசப்போகிறார், தேர்தல் குறித்து முக்கிய முடிவு எடுக்கப் போகிறார் என்று கொளுத்திப் போட்டார்கள் சில பாஜகவினர்.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளை அப்படியே ரத்து செய்துவிட்டு, பிரதமர் மோடி புதுச்சேரி தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகப்போகிறார் என்று இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. ஏன் இந்தத் திடீர்மாற்றம்? எல்லாம் பாஜகவில் தொடர்ந்து நிலவும் குழப்பங்கள்தான்.

என்டிஏ கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று சொன்னார் அமித்ஷா. அதிமுக தலைமையில்தான் ஆட்சி அமைப்போம் என்று தன்பங்குக்கு எடப்பாடியும் சொல்லிக் கொண்டு இருந்தார். அப்போதே தெரிந்தது இவர்களுக்கிடையே இருப்பது ஏழாம் பொருத்தம் என்று. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனுக்கும், அண்ணாமலைக்கும் இடையே பனிப்போர் நிகழ்வது ஊரறிந் ரகசியம்.




தொகுதி உடன்பாட்டின்படி 27 தொகுதிகள் பாஜகவுக்குக் கிடைத்தும் இதுவரை (01-04-2026) முழு வேட்பாளர் பட்டியலை அறிவிக்க பாஜகவால் முடியவில்லை. சிங்காநல்லூர் தொகுதியை எதிர்பார்த்தார் அண்ணாமலை, கிடைக்கவில்லை. அடுத்து வடகோவையைக் குறிவைத்தார். அதை வானதி சீனிவாசன் பிடித்துக்கொண்டார். எப்படியும் அண்ணாமலையைச் சமாதானப்படுத்தித் தேர்தலில் போட்டியிடச் செய்ய வேண்டும் என்ற பியூஸ்கோயல் மூலம் மேலிடம் எடுத்தமுயற்சியை ஏற்கவில்லை அவர்.

பாஜகவுக்கு அதிமுக ஒதுக்கிய 27 தொகுதிகள் பாஜகவுக்கு செல்வாக்கு இல்லாதவை என்று ஒரு பிரிவினர் கருதுகின்றனர். குறிப்பாக கிணத்துக்கடவு, திருப்பூர் போன்ற தொகுதிகளைப்பெற பாஜக தவறிவிட்டது என்று உள்ளடி வேலைகள் நடப்பதாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட குழப்பங்களுக்கு இடையே இறுதி வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு தடுமாறிக் கொண்டு இருக்கிறது பாஜக. இந்தச் சூழலில் மோடியின் தமிழகம் - புதுச்சேரி பயணம் முடிவானதால் கடுப்பாகிப்போன பிரதமர் தமிழ்நாட்டின் நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு புதுச்சேரி புறப்படுகிறாராம் எந்தத் தீர்வும் காணாமல், என்பது இப்போதைய செய்தி! ●

# படங்கள் பேசுகின்றன


















தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஊசிப் பட்டாசு

அம்மையார் வானதி சீனிவாசன் அவர்கள் கொஞ்சம் விபரமாகப் பேசுவார் என்று பார்த்தால், அது பாஜகவிடம் இல்லையே என்று பின்னர் புரிந்தது.

அவர் தன்னுடைய எக்ஸ் தளத்தில் (01-04-2026) , திமுக ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டின் பெயரைக் 'கருணாநிதி தேசம்' என்று பெயர் மாற்றிவிடுவார்கள் என்று சொல்லியிருக்கிறார், ஐயோ பாவம்! 'தமிழ்நாடு' என்ற இனிய, அழகான பெயரை ஏன் மாற்ற வேண்டும்? ஒருவேளை கருணாநிதி தேசம் என்ற பெயரை வைக்க வேண்டும் என்று சூசகமாகச் சொல்கிறாரோ, அம்மையார்.

அந்த மை காய்வதற்குள் 'தட்சிணப் பிரதேஷ்' என்று தமிழ்நாட்டின் பெயரை மாற்றிவிடுவார்கள் என்றும் அவரின் புலம்பல் தொடர்கிறது. ஏற்கனவே ஒருமுறை தமிழ்நாடு உள்பட தென்பகுதியை 'தட்சிணப் பிரதேஷ்'

என்ற பெயரில் அமைக்க டில்லி முயன்றதை தந்தைபெரியார் தலைமையிலான திராவிடப் பெரும்படை தகர்த்துச் சாய்த்து விட்டார்கள் என்ற வரலாறு கூட வானதிக்குத் தெரியவில்லை.

சாரி மேடம், எங்கள் முதலமைச்சருக்குப் பொறுப்பான வேலைகள் நிறைய இருக்கின்றன.

போகிறபோக்கில் 1998 திமுக ஆட்சியில் கோவை மதக்கலவரம் குறித்தும் பேசியிருக்கிறார். அப்படியானால் 2016 இலும் அங்கே மதக்கலவரம் ஏற்பட்டதே. அதற்கு யார் காரணம் என்றும் அவர் விளக்க வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம்அமைதிச்சோலையாகவும்,மதநல்லிணக்க அடையாளமாகவும் இருந்து வருகிறது. இதைப் பொறுக்காத பாஜக திருப்பரங் குன்றத்தில் நுழையப் பார்த்தது. இப்போது வானதி சீனிவாசன் எக்ஸ்பதிவும் கவனத்திற்கு உரியதாக இருக்கிறது.

எப்படி இருந்தாலும் இது 'தமிழ்நாடு', இங்கே காவிகளின் ஊசிப் பட்டாசு கூட வெடிக்காது!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408






# பேசும் படங்கள்




SUN NEWS
01 APR 2026
புதுச்சேரி
“தமிழ்நாட்டில் தவெக உதவியுடன் NDA கூட்டணி ஆட்சி அமைக்கும்”
ஒன்றிய இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலே பரபரப்பு தகவல்


“உங்களுக்கு பாதுகாப்பு கொடுக்காத ஸ்டாலின் சார் அரசை தூக்கி வீசியெறிவோமா?“
- பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய் பேச்சு


VIJAY,
PRESIDENT,
TAMILAGA VETTRI KAZHAGAM
To
Amit Shah
Union Home Minister,
Ministry of Home Affairs,
Government of India.
Date: 01.04.2026
To
Ajay Kumar Bhalla
Home Secretary
Ministry of Home Affairs
Government of India
Subject: Representation regarding serious lapses in security arrangements for Thiru. Vijay, President of Tamilaga Vettri Kazhagam, a "Y" Category protectee, during election campaign in Tamil Nadu
Respected Sir,
தேர்தல் திருவிழா 2026
மணிப்பூர் ஆளுநருக்கு தவெக கடிதம்!
விஜய்க்கு பாதுகாப்பு வழங்கக்கோரி மணிப்பூர் ஆளுநருக்கு தவெகவினர் கடிதம். உள்துறை செயலாளருக்கு கடிதம் எழுதுவதற்கு பதிலாக, 2 ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வுபெற்ற அஜய்குமார் பல்லாவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். தற்போது அவர் மணிப்பூர் ஆளுநராக உள்ளார்.


வேட்புமனு தாக்கல் செய்த கையோடு பெரம்பூரில் தேர்தல் பரப்புரையை தொடங்கிய விஜய்
- செய்தி
பு இ மு
ஓட்டு
41
கரூர்


வேல் வீச்சு
தமிழ் கேள்வி
தாமரை சின்னத்தில் போட்டியிடும் G.K.வாசனின் முடிவைக் கண்டித்து தமாகா நிர்வாகிகள் இருவர் கட்சியில் இருந்து விலகினர்
- செய்தி
அதிர்ச்சி தரும் செய்தி இது. தமாகா-வில் G.K.வாசனைத் தவிர இரண்டு நிர்வாகிகளும் இருந்தனர் என்பதை நம்பவே முடியவில்லை.
-தி.செந்தில் வேல்